விலை: 30.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 075 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 20 வெள்ளிக்கிழமை (04.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ். பல்கலையின் 35ஆவது பட்டமளிப்பு விழா



( 03 ஆம் பக்கம் பார்க்க )

## மின்தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழில் மெழுகுவர்த்தி போராட்டம்



(யாழ்ப்பாணம்)

மின்சாரத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச்லைட் ஏந்திய போராட்டமொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று இரவு 8.30 மணியளவில் ஏ-9 பிரதான வீதி நல்லூர் செம் 15

# விமல், உதய கம்மன்பில அமைச்சுப் பதவிகளிலிருந்து உடனடியாக நீக்கம்

## ஜனாதிபதி கோட்டா அதிரடி





**(கொழும்பு)**

**விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சு பதவிகளில் இருந்து உடனடியாக நீக்கப்பட்டுள்ளனர்.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி குறித்த பதவி நீக்கத்தை மேற்கொண்டுள்ளார்.**

அரசியலமைப்பின் 47 (2) அத்தியாயத்திற்கமைய வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோரை நேற்று முதல் அமுலாகும் வகையில் அமைச்சு பதவிகளில் இருந்து அதிரடியாக நீக்கியுள்ளார்.

அமைச்சரவை கூட்டுப் பொறுப்பிற்கு முரணாக செயற்ப 15

## உக்ரைன் மீதான படையெடுப்பு தொடரும்

### ரஷ்ய அதிபர் புடின்

(மொஸ்கோ)

படைவிலக்கல் மற்றும் நடுநிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் உக்ரைனில் மேற்கொள்ளப்படும் ரஷ்ய இராணுவ நடவடிக்கையின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என்று பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோனிடம் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் நேற்று தொலைபேசியில் 15

### க.பொ.த (சா/த) பரீட்சை

## அழகியல் பாட பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)

2020/2021 ஆம் ஆண்டுகளுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் அழகியல் பாடத்திற்கான செயல்முறைப்பெறுபேறுகள்வெளியாகியுள்ளன.

இந்த பரீட்சை பெறுபேறுகளை www.doenets.lk என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் 15

## இன்றும் ஏழரை மணித்தியாலம் மின்வெட்டு

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்றும் ஏழரை மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை அறி 15

## ஏற்கக்கூடிய அரசியலமைப்பை உருவாக்கினால் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்

### இலங்கை தூதுக்குழுவிடம் ஐ.நா ஆணையாளர்



(கொழும்பு)

அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் அமைப்பினை உருவாக்கினால் இலங்கையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார். 15

## கொரோனா 20 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 20 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதற்கமைய நாட் 15

## எரிபொருளுக்காக காத்திருக்கும் பொதுமக்கள்



### கோப்பாயில் விபத்து;

## தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் பலி



(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் உயிரிழந்துள்ளார்.


கோப்பாய் கிருஷ்ணன் கோவில் சந்தியில் நேற்று 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இலங்கையின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில்

## அமெரிக்க தூதுவருடன் நிதியமைச்சர் பஸில் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜியூன் சங் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கை தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார ரீதியான சவால்கள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு எவ்வாறு ஒத்துழைக்க முடியும்? என்பது குறித்து இதன் போது பேசியதாக அமெரிக்க தூதுவர் ஜூலி ஜியூன் சங் தெரிவித்துள்ளார்.

செழிப்பான, புதுமையான மற்றும் அண்டை நாடுகளுடன் இணைக்கப்பட்ட இலங்கைப் பொருளாதாரத்தை நாம் அனைவரும் விரும்புகிறோம்.

இதனை நோக்கமாகக் கொண்டே கோவிட் தொற்று நோய்க்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா 17.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை பங்களிப்புச் செய்தது எனவும் அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.(ம)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- யாழ்.நகரில் இருந்து 5 km தொலைவுக்கு உட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு

**076 097 3121**



# ஏற்றம் கண்டு போற்றுகின்றோம்



இன்று (04.03.2022) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த எங்கள் கணிதபாட ஆசிரியர்

**திரு.F.அருட்செல்வன்**

அவர்கள் கல்வியியல் முதுமாணி (Master of Education) பட்டத்தைப் பெற்றுக் கொள்வதையிட்டு அவரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

Best Wishes

ஆசானால் உயர்வுபெற்ற பொறியியல் பீட மாணவர்கள் மொரட்டுவ பல்கலைக்கழகம்

(10454)


# 'நன்றி' விமல் வீரவன்ஸ

## ஒரு வார்த்தையில் கோட்டாவுக்கு பதில்

Wimal Weerawansha
4m ·

Thank you !

· See original · Rate this translation

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவை அமைச்சுப்பதவியில் இருந்து நீக்கி அரச தலைவர் கோட்டாபய அனுப்பிய கடிதத்திற்கு, விமல் வீர வன்ஸ பதிலளிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன்படி, ஒற்றை வார்த்தையில் "நன்றி" என்று தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

நேற்றையதினம் உதய கம் மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகிய இருவரையும் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ அவர்களது அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### ஐ.நா அலுவலகம் முன்

# பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரி ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

நாட்டிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க கோரியும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடராமல் சிறைவாசம் அனுபவிப்போரை விடுவிக்கக் கோரியும் சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினால் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை காரியாலயத்திற்கு முன்னால் அமைதியான எதிர்ப்பு நடவடிக்கையொன்று இடம்பெற்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் சிறைவாசம் அனுபவித்துவருபவர்களது குடும்ப உறுப்பினர்கள் தங்களது பிள்ளைகள் சகிதம் இந்த அமைதியான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கவும், நீதிமன்ற நவடிக்கைகள் ஏதுமின்றி சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்கக்கோரிய மனுவொன்று ஐ.நாவின் இலங்கை காரியாலயத்தின் உள்ளூர் பாதுகாப்பு பிரிவின் அதிகாரியொருவரிடம் இதன்போது கையளிக்கப்பட்டது. (ம)

# நாட்டில் மேலும் 711 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 711 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 648,410ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 22, 638 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சைபெற்றுவருகின்றனர். (ம)


**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

**IELTS Life Skills - A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH** நேரடி வகுப்புக்களாக

புதிய பிரிவு ஆரம்பம் 7/3/2022 Mon 9:30 am

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deutsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு

**DMI COMPUTER EDUCATION**
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

(C-3890)



## கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் (வ/து)

## காலங்கடந்த கடன்கள் செலுத்துதல்

மேற்படி எமது சங்க கிராமிய வங்கியில் கடன் பெற்று இதுவரை செலுத்தாது காலங்கடந்துள்ள கடன்களை 31.03.2022 முன் செலுத்தி சங்க செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். தவறும் பட்சத்தில் சட்டப்படி அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தலைவர்,
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்

02.03.2022 (C-3891)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச் சட்ட பயன்பாட்டை உடன் நிறுத்த வேண்டும்

## ஐ.நா.நிபுணர்கள் பரிந்துரை

**(ஜெனிவா)**

**மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும் வகையில் சர்வதேச நியமங்களுக்கு உட்படாதவாறு இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஐ.நா நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர்.**

அத்துடன், பயங்கரவாத தடைச் சட்டத்தில் சர்வதேச நியமங்களுக்கு அமைய திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தன்னிச்சையாக தடுத்து வைக்கப்படும் மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு ஆபத்து உள்ளது

இது மத மற்றும் இன சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படலாம் எனவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும் வரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டுக்கு தடை விதிக்க வேண்டும் என அவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இலங்கையில் சிறுபான்மை சமூகங்கள் மற்றும் அரசியல் அதிருப்தியாளர்களை இலக்கு வைப்பதற்கும், சித்திரவதைகள் மூலம் பொய்யான வாக்குமூலங்களை பெறுவதற்கும், நீண்டகால தன்னிச்சையான காவலில் வைப்பதற்கும் 40 ஆண்டுகளுக்கும் மேலாக பயங்கரவாத தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள மிக மோசமான சில விதிகளை நீக்கும் முன்மொழிவுகள் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திருத்தத்தில் உள்ளடக்கப்படவில்லை.

திருத்தத்துக்கு முன்மொழியப்படாத சில சரத்துக்கள் தன்னிச்சையான தடுப்புக் காவல், சித்திரவதை மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் உள்ளிட்ட கடந்த கால மனித உரிமை மீறல்கள் எனக் கூறப்படுவதற்கு வழி வகுத்தன.

இவ்வாறான சரத்துக்களை திருத்த முன்வராததன் மூலம் பயங்கரவாத தடைச் சட்டத்தை அர்த்தமுள்ள வகையில் திருத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பு கேள்விக்குள்ளாகிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காண்பதற்கான உடனடி கடப்பாடு இலங்கைக்கு உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்ளும் இலங்கை அதற்குரிய சலுகையை அனுபவிப்பதற்காக உறுதியளித்தவாறு சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு முழுமையாக இணங்கக் கூடிய வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய வேண்டும்.

அத்துடன், சர்வதேச நியமங்களுக்கு உட்படாத பயங்கர வாத தடைச் சட்டத்தின் கீழ் அநியாயமாக சிறையில் அடைக்கப்பட்ட அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்று ஐ.நா. நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர். (நி)

## மீண்டும் எகிறியது மசகு எண்ணெய் விலை

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.

அதற்கமைய, நேற்று ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 116 அமெரிக்க டொலராக மீண்டும் உயர்வடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாயொன்றின் விலை 110 டொலராக அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில், நேற்று அதன் விலை 6 டொலர் அதிகரித்து 116 டொலராக உயர்வடைந்துள்ளது.. (நி)

# யாழ்.பல்கலைக் கழகத்தின் 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா












யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி நேற்று வியாழக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் கோலாகலமாக ஆரம்பமானது. நேற்று ஆரம்பமான பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது அமர்வு தொடர்ச்சியாக மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளன.

(படங்கள்- சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் 25 சதவீத ரசிகர்களுக்கு அனுமதி

15 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் தொடங்குகிறது. 10 அணிகள் பங்கேற்கும் இப்போட்டி தொடர் மே 29 ஆம் திகதி வரை நடைபெறும்.



கொரோனா பரவல் காரணமாக இந்த ஆண்டு போட்டிகள் மராட்டிய மாநிலம் மும்பை, புனேயில் மட்டும் நடத்தப்படுகிறது.

மும்பையில் உள்ள வான்கடே, பிரபவுர்ன், டி.வை.படேல் ஸ்டேடியம் ஆகிய மைதானங்களில் 55 போட்டிகளும், புனே மைதானத்தில் 15 போட்டிகளும் நடைபெறுகிறது.

பிளே-ஆப் மற்றும் இறுதிப் போட்டிக்கான இடம் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டித் தொடரில் மைதானத்தில் ரசிகர்களுக்கு அனுமதி கிடையாது என்று முதலில் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியை காண மைதானத்தில் 25 சதவீத ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இதற்கான அனுமதியை மும்பை கிரிக்கெட் சங்கத்துக்கும், மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்கத்துக்கும் அரசு வழங்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சமீபத்தில் மராட்டிய அமைச்சர் ஒருவர் கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் சந்தித்து பேசியபோது மராட்டியத்தில் நடக்கும் அனைத்து ஐ.பி.எல். போட்டியிலும் 25 சதவீத ரசிகர்களுக்கு அனுமதி வழங்க உறுதி அளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# விதிமுறைகளை மீறினால்

## கழகங்கள் மீது நடவடிக்கை

### யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம்



அண்மைக்காலமாக போட்டிகளின் போது மைதானத்தில் மத்தியஸ்தர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவது, மத்தியஸ்தரின் தீர்ப்பை எதிர்த்து முறையிடுவது, விதிமுறைகளுக்கு பொருத்தமற்ற முறையிலும், போட்டிக்கு களங்கம் விளைவிக்கும் முறையிலும் வீரர்கள், கழக அலுவலர்கள், ரசிகர்கள் மத்தியில் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.


சங்கத்தினுடைய பொதுக் கூட்டத்தின் தீர்மானங்களுக்கு அமைவாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்கின்ற பட்சத்தில் எந்தவிதமான எச்சரிக்கைகள் ஏதுமின்றி வீரர்கள் மீதும், கழகங்கள் மீதும் விளையாட்டினுடைய மேன்மையையும், அதன் விதிமுறைகளையும் பேணுகின்ற வகையில் சங்கத்தால் சகல கழகங்கள் மீதும், வீரர்கள் மீதும் உடனடியாக பாரபட்சமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதேவேளை, கழகங்கள் தங்களது முறைப்பாடுகளினை உரிய முறையில் எழுத்து மூலமாக போட்டி ஏற்பாட்டாளரிடமோ அல்லது சங்கத்திடமோ முன் வைக்க முடியும் என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் அறிவித்துள்ளது. (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2525

**விதுசனா**

பயங்கர சண்டை மாமா உக்ரேய்ன்லயா மாப்ள



உக்ரேய்னா, வலிமை படத்துல மாமா

**சியாம்**

BED-COFFEE யோட புருஷன எழுப்புற காட்சிய சினிமால பாத்துட்டு...



உண்மையினு நம்பி கல்யாணம் பண்ணி, கடைசியில பால் வாங்கிறதே நாம தான்!

**துர்க்கா**

முன்னாடி எல்லாம் மொபைல்ல கேம் இல்லனு சொன்னா பேசாம போய்ருவாங்க....



இப்ப என்னடான்னா "பரவால்ல குடு நானே டவுண்லோட் பண்ணிக்கிறேன்"னு சொல்றாய்ங்க.

**சந்திரன்**




இந்த ஸ்டிக்கர ஒட்டாம இருந்தா கூட நாங்க கதவ கரெக்ட்டா திறந்திருவோம்டா.. இத ஒட்டி மண்டைய குழப்பி விட்ரீங்களேடா அப்ரசண்டிகளா

**இந்து**



காதலித்து ஏமாற்றம் அடைந்தவர்களுக்கு வலி அதிகம்... தெரியுமா உங்களுக்கு...?



தம்பி... சும்மா எதுவுமே தெரியாம பேசாத... நீ காதலிச்ச புள்ளையவே கல்யாணம் செஞ்சு பாரு... அப்புறம் எதுல வலி அதிகம்ன்னு தெரியும்...

**தாஸ்**

திருமணம் ஆன புதிதில்



சில மாதங்கள் கழித்து



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 29 - 10 - 1940



உதிர்வு 01 - 03 - 2022

## திருமதி.பாலசரஸ்வதி இராசரத்தினம்

தென் மட்டுவிலை பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.பாலசரஸ்வதி இராசரத்தினம் அவர்கள் 01.03.2022 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற இராஜலிங்கம் (லிங்கம்) மற்றும் இராஜமலர் (மலர்), காலஞ்சென்ற அமுதலிங்கம் (அமுதன்) மற்றும் சாந்திமலர் (சாந்தி), நித்தியமலர் (நித்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவமலர், பாஸ்கரன் (தம்பி), வனஜா, இராஜரத்தினம், காந்தீபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கே.எஸ்.ரகு, செல்வராணி, குணநாதன் (குணம்), காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சற்குணநாதன், சிவபாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதர்ஜனா, தவராஜசேகரம், இரட்ணசோதி, நிர்மலாதேவி, குணரூபா மற்றும் அமரத்துவமடைந்த இராஜதுரை, சேனாதிராசா, பாக்கியம், தங்கலட்சுமி, தங்கராசா, இராசய்யா ஆகியோரின் அன்பு மைத்துனியும், றிஷானி, தர்சன், தர்ஷிகா, தீபிகன், துவாரகன், நர்த்திகன், கவிஷன், தீப்தி, ஷகித் ஆகியோரின் பேர்த்தியும், அபிஷா, அபிஷேக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 04.03.2022 வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருதடி ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால். (10459) 077 116 2479 தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திரு.நாகலிங்கம் சுந்தரசிவம்

காரைநகர் கள்ளித்தெருவை பிறப்பிடமாகவும், சுவிஸ் செங்காலன் (Goldach) ஐ வதிவிடமாகவும் கொண்ட அமரர்களான நாகலிங்கம் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனான திரு.நாகலிங்கம் சுந்தரசிவம் அவர்கள் 02.03.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியை தொடர்பான தகவல்கள் பின்னர் அறியத்தரப்படும்.

மாவடிச்சந்தி,
வட்டுக்கோட்டை.
(077 546 4835) (C-3889)

தகவல்:
நா.சுந்தரமூர்த்தி (சகோதரன்)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்.ஆழ்வார் கந்தசாமி

(அகில இலங்கை சமாதான நீதவான் ஓய்வுபெற்ற இ.போ.ச.பண்டகசாலை பொறுப்பாளர்)

தோற்றம் 25 . 03 . 1945



மறைவு 08 . 03 . 2019

மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் சிந்தையிலும்
செயலிலும் நினைவிலும் உங்களை
எண்ணியபடியே எமது வாழ்க்கைப் பயணம் தொடரும்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (C-3885) குடும்பத்தினர்



டாக்டர் ரகுபதி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் நோயாளர்களின் பயன்பாட்டிற்கு என கட்டில்களுக்கான படுக்கை விரிப்புக்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
(படம் :-ரவிசாந்)

# இராசிபலன்

04.03.2022
மாசி 20, வெள்ளிக்கிழமை
துதியை முன்னிரவு 10.46 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 3.46 மணிவரை
சுபநேரம் - 6.26-7.56 மணிவரை
இராகுகாலம் -10.56-12.26

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம் - மகம்

**வளவன்**

**மேஷம்:** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் நிலை ஏற்படலாம்.

**ரிஷபம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பேச்சைக் குறைத்து செலவில் திவீரம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

அதிஷ்டம் இல்லையேல் திறமையும் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.இந்திய துணைத் தூதரகத்தால் கடந்த முதலாம் திகதி மகா சிவராத்திரி உற்சவம் காரை நகர் ஈழத்து சிதம்பரம் கோவிலில் நடைபெற்றது.

# வடக்கில் எதிர்வரும் நாட்களில் கன மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கில் எதிர்வரும் நாட்களில் கனமழைக்கு வாய்ப்புள்ள தால், மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானமாக இருக்குமாறும் வெங்காயம் மற்றும் சிறுதானிய செய்கை யாளர்கள் விதைத்தல் மற்றும் அறுவடை செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வது சிறந்தது என யாழ்ப்பாண பல் கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

வங்காள விரிகுடாவில் இல ங்கைக்கு தென்கிழக்கே உரு வான காற்றமுத்த தாழ்வு நிலை தற்போது ஆழ்ந்த காற்ற முத்த தாழ்வு நிலையாக மாற் றமடைந்துள்ளது. இது மேற்கு வடமேற்கு திசை நோக்கி நக ரும் என எதிர்பார்க்கப்படு கிறது.

இதனால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களின் பல பகுதிகளு க்கும் பரவலாக மிதமான மற்றும் கன மழை கிடைக்க வாய்ப்புள்ளது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக கன மழை கிடைக்க வாய்ப்பு ள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் வடக்கு மாகாண த்தின் ஏனைய பகுதிகளை விட சற்று கூடுதலான அளவு மழையைப் பெற வாய்ப்பு ள்ளது. இலங்கையின் தென் கிழக்கு, கிழக்கு மற்றும் வட க்கு மாகாணங்களின் கடற் பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் மிகுந்த அவதானமாக இருப்பது அவசி



யமாகும். விவசாயிகள் குறிப் பாக வெங்காயம் மற்றும் சிறு தானிய செய்கையாளர்கள் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வரை அறுவடை மற்றும் விதைத்தல் செயற் பாடுகளை தவிர்த்துக் கொள் வது சிறந்தது எனவும் தெரி வித்தார். (4-6-33)

## திறன்காண் போட்டி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மகாஜனக் கல்லூரியின் மகாஜனன் கணித விஞ்ஞான திறன்காண் போட்டிப் பரீட்சை–2022 இதுவரை தரம் 8 மாண வர்களுக்கு நடத்தப்பட்டு வந்த நிலையில் இந்த ஆண்டில் இருந்து தரம் 9 மாணவர் களுக்கு நடத்தப்படவுள்ளது. இப் பரீட்சையை எதிர்வரும் மே மாதம் 24 ஆம் திகதி நடத்து வதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

விண்ணப்பங்கள் யாவும், மாணவர் முழுப்பெயர் , பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 31.03.2022 இற்கு முன்ன தாக, அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை எனும் முகவரிக்கு அனுப்பி வைக் குமாறு மகாஜனக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (4–6)

## தமிழ் மொழி மூல எல்லே நடுவர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய எல்லே சம்மேளனத்தால் சித்திரை மாத நடுப்பகுதியில் தமிழ் மொழிமூல தேசிய எல்லே நடுவர் பரீட்சை யாழ்ப்பாண த்தில் நடத்தப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக இல ங்கை தேசிய எல்லே சம்மேள னம் யாழ்.மாவட்ட எல்லே சங்கத்துடன் இணை ந்து எதிர் வரும் 12,13 ஆம் திகதிகளில் யாழ்.நெல்லியடி மத்திய கல் லூரியில் இதற் கான பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளனர்.

இப் பரீட்சைக்கு யாழ். மாவட்ட எல்லே சங்கத்தினூ டாக விண்ணப்பித்தவர்கள் குறித்த இரு தினங்களும் பயிற்சியில் கலந்து கொள் ளுமாறும் தங்கள் வர வினை 077 730 2031, 077 653 4514 ஆகிய தொலைபேசி இலக் கங்களுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் யாழ்.மாவ ட்ட எல்லே சங்கம் அறிவித் துள்ளது. (4)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அமரர் களான சுப்பிரமணியம் நகு லேஸ்வரி ஞாபகார்த்த குட்டிச் சுட்டி முன்பள்ளி விளையாட்டு விழா-2022 நாளை மறு தினம் 6 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி க்கு முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது. (4-6)

## திருட்டு ஒருவர் கைது



(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி பகுதி யில் உள்ள வீடொன்றில் திரு ட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அப்பகுதியைச் சேர்ந்த 25 வய துடைய சந்தேக நபர் நேற்று முன்தினம் நெல்லியடி பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து இரண்டு காஸ் சிலி ண்டர்கள், இரும்புப் பொருட் கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன. (4-6-60)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச் சொற் பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சொற்பொழிவினை சைவப்புலவர் கா.கமல நாதன் "என்னை நன் றாக இறைவன் படைத் தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே. " என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார். (4-6)

## மாடு வெட்டிய மூவர் ஒரு வருடத்திற்கு பின் கைது

(அராலி)

48 ஆயிரம் ரூபா பெறு மதியான மாட்டினை களவாடி வெட்டியமை தொடர்பான வழ க்கு கடந்த 2020 டிசெம்பர் மாதத்திலிருந்து ஒருவருட காலமாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் ஊர்கா வற்றுறை - அனலைதீவு 3ம் வட்டாரத்தில் வசிக்கும் சந்தேக நபர்களான 3 நபர்கள் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் களை ஊர்காவற்றுறை நீதி மன்றில் முற்படுத்தவுள்ள தாக ஊர்காவற்றுறை பொலி ஸார் தெரிவித்தனர். (4-6-104)

## சட்ட ஒழுங்கு தொடர்பில் ஆளுநர் கலந்துரையாடல்



(அராலி)

வடமாகாணத்தின் சட்டம் ஒழுங்கு தொடர்பில் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியா கராஜா கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை கலந்துரையாடினார்.

வடமாகாணத்தில் சட்டம் ஒழுங்கு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய செயற் பாடுகள் தொடர்பில் ஆளுநரு டன் கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் பங்குபற்றி யமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)

## ஆலய உண்டியல் உடைத்து திருடிய இருவர் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆல யத்தில் உண்டியல் உடைத்து திருடிய நாவற்குழி பகுதியை சேர்ந்த இருவர் நேற்று யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரி வினரால் கைது செய்யப்பட் டனர்.

நேற்று முன்தினம் ஆரிய குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் உள்ள உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் திருட ப்பட்ட நிலையில் ஆலய நிர்வாகத்தினரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறை ப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவி னரால் குறித்த உண்டியலை [illegible] நாவற்குழி பகுதியில் வைத்து கைது செய்யப்பட் டனர். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயுவை இறக்குமதி செய்வதில் சிக்கல்

## லிட்ரோ–லாஃப் காஸ் நிறுவனங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

வங்கிகள் நாணய கடித ங்களை வழங்க அனுமதிக் காமையினால் எரிவாயுவை இறக்குமதி செய்து விநியோ கிக்க முடியாத நிலை ஏற்பட்டு ள்ளதாக லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

லிட்ரோ நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுவுடனான மூன்று கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ள போதிலும் நாணயக் கடிதங்களை திறந்து டொலர்களை செலுத்த முடியாத காரணத்தினால் அவற்றை இறக்க முடியாதுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், லிட்ரோ எரிவாயு விநியோகம் தொழிற்சாலைகள் மற்றும் தகனசாலைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட எரிவாயு இருப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொடர்ந்தும் சந்தையில் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் விரைவில் குறித்த விநியோகமும் தடைபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நாயகம் மிச்செல் பச்லெட்டினை, ஜெனிவாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினர் சந்தித்துள்ளனர். ஜெனிவாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

## மின்சாரம் துண்டிப்பு- வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு;

# எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்



(கொழும்பு)

எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, மின்சாரம் துண்டிப்பு மற்றும் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஹற்றன், கினிகத்தேனை நகரில் நேற்று வியாழக்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜே.வி.பியினர் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில் அக்கட்சியின் அமைப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர். (நி)

# வங்கி அட்டைகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

வங்கிகளினால் வழங்கப்படும் கடனட்டைகள் மற்றும் வரவட்டைகள் என்பவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அட்டைகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மைக்ரோசிப்புக்கு உலகம் முழுவதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அதனை இறக்குமதி செய்யும் லேக்ஹவுஸ் டெக்னோ லஜிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டோனி ஜோன் புள்ளே தெரிவித்துள்ளார்.

அத்துடன், டொலர் தட்டுப்பாடும் அதனை இறக்குமதி செய்வதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)


# VACANCY

Lion Engineering and Construction is inviting for the following position

**Position: Site Supervisor**

-Basic Knowledge in building construction

-Good Communication Skill are expected

Send your CV: lionengineering9@gmail.com

Please Contact -077 558 8835

076 200 4827 (10460)

**Lion Engineering and Constrction**
**No.256, K.K.S.Road, Jaffna**


## பரசிற்றமோலின் சில்லறை விலை ரூ.2.30

(கொழும்பு)

வலி நிவாரணி மற்றும் காய்ச் சலுக்காக பொது வாகப் பாவிக்கப்படும் 500 மி.கி. அளவுடைய பரசிற்றமோல் மருந்துக்கான அதிகபட்ச சில்லறை விலை 2 ரூபாய் 30 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இது குறித்த வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

உலக சந்தையில் பரசிற்ற மோல் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்களின் விலை அதிகரித்ததன் காரணமாக பெரும்பாலான நிறுவனங்கள் அவற்றை இறக்குமதி செய்வதை தவிர்த்து வருகின்றன.

இதனால் உள்ளூர் சந்தையில் பரசிற்றமோல் மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: சூரி 5 செவ் 9 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பட்டதாரிவங்கியாளர் (அரசதொழில்)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும் அரச தொழில்<br>தொ.இ: B/12382 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 28 ½ சூரி. செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc (Hons) in Q.S<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி சைவ போசணம் அசைவமும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/12438 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 27 ¾ சூரி. செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L தோட்டம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12383 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: 40 ¼ சூரி 8 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: கொக்குவில் தொழிநுட்பகல்லூரி மாணவி<br>எதிர்பார்ப்பு: படித்த மாப்பிள்ளை<br>தொ.இ: G/12439 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 31 ¾ சூரி 3 செவ் 5 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் உத்தியோகம் உள்நாடுமட்டும்<br>தொ.இ: B/12386 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி 4<br>கி.பா: 33 ¾<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: கணனி வடிவமைப்பாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: அரசதனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/12442 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: சூரி 9 செவ் 11 இல்<br>உயரம்: 174 cm<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர்<br>தொ.இ: B/12388 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 4<br>கி.பா: 23 சூரி. செவ் 10 இல்<br>உயரம்: 152 cm<br>தகைமை/தொழில்: தாதிய உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/12437 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொடர்பு கொள்ளவும்
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்



# சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

## பதவி வெற்றிடம்

**1. நிதி உதவியாளர் (பெண்)**
- க.பொ.த (உ/த) வில் வணிகத் துறையோடு HNDA, அல்லது அதற்கு இணையான தகுதி.
- கணினி அறிவு (MS office) இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை: 25-50
- சம்பளம்: ரூ.14,610+25% + தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)

**2. களஞ்சியப் பொறுப்பாளர் + மேற்பார்வையாளர் (கட்டட நிர்மாணம்) ஆண் (தரம் III)**
- தகைமை: க.பொ.த உ/த்வுடன் துறை சார்ந்த சான்றிதழ்.
- முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- வயதெல்லை: 25-65
- சம்பளம்: ரூ.18,250+ 25% + தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)
- மீளளிக்கப்படக்கூடிய ரூபா 10,000.00 வைப்புத் தொகை.

**3. உபவிடுதிக் காப்பாளர்: ஆண்/ பெண்**
- தகைமை: க.பொ.த (உ/த)வுக்குக் குறையாதது.
- IT யில் தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- உணவும் தங்குமிட வசதியும் இலவசம்
- வயதெல்லை: 25-50
- சம்பளம்: ரூ.12,510+ 25%+தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)

**4. சாரதி:**
- க.பொ.த (சா/த) அல்லது க.பொ.த (உ/த) வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், தீய பழக்க வழக்கங்கள் அற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- வாகனச் சாரதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். (முச்சக்கர வண்டி மற்றும் இலகு வாகனம்)
- வயதெல்லை: 30-60
- அனுபவம் -3 வருடங்கள்
- சம்பளம்: ரூபா 20,000+25% + தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)

**5. சமையலாளர்:**
- அனுபவம் வாய்ந்த பெண்/ஆண் சமையலாளர் தேவை.
- இல்லத்தில் தங்கியிருப்பது விரும்பத்தக்கது.
- வயதெல்லை: 25-55 வரை.
- சம்பளம்: ரூபா 18,000 +25% + தற்காலிக வாழ்க்கைப்படி (ரூ.3000.00)

- அனைத்து நியமனங்களும் 6 மாத தகுதிகாண் கால முடிவில் EPF,ETF) திட்டத்தில் இணைக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 11.03.2022 வரை ஏற்றுக் கொள்ளப்படும். சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
தொலைபேசி இல: 021 222 6525

லோ.துஷிகரன்
செயலாளர்

(ஏ-3889)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய மாணவர்கள் வெளியேற ஆறு மணி நேர அவகாசம்

### ரஷ்யா அறிவிப்பு

(கீவ்)
உக்ரேயனின் மிகப்பெரிய நகரமான கார்கிவில் இருக்கும் இந்தியர்கள் அங்கிருந்து வெளியேற ஆறு மணி நேரம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

உக்ரேயனில் மருத்துவ படிப்புக்காக சென்று போர் காரணமாக உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்ற அச்சத்தில் உணவுப்பொருட்களை வாங்க கடைக்கு சென்ற வேளை இந்திய மாணவர் நவீன் ரஷ்ய படைகளின் செல் தாக்குதலில் உயிரிழந்தமை கடும் அதிர் வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே கார்கிவில் உள்ள இந்தியர்கள் வெளியேற ரஷ்யா ஆறு மணி நேர கால அவகாசம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ரஷ்யாவிலுள்ள தூதரகத்தில் உக்ரேயன் கொடி அகற்றப்பட்டது

(மொஸ்கோ)
ரஷ்யாவில் மொஸ்கோவிலுள்ள உக்ரேயன் தூதரகத்தில் உக்ரேயன் கொடி அகற்றப்பட்டுள்ளதாக ரஷ்ய அரசு செய்தி நிறுவனமான ஆர்.ஐ.ஏ.நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளது.

அக்கட்டடம் உக்ரேயனிய தூதரகம் என்பதைக் குறிக்கும் அடையாளமும் அகற்றப்பட்டு கதவுகள் மூடப்பட்டன.

பெப்ரவரி 24 அன்று ரஷ்யாவுடனான இராஜதந்திர உறவுகளை உக்ரேயனிய அரசாங்கம் துண்டித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கொத்துக் கொத்தாக சரணடையும் ரஷ்ய இராணுவ வீரர்கள்

### திகைக்க வைக்கும் உக்ரேயன்

(கீவ்)
உக்ரேயன் - ரஷ்யப் போர் 8 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், மனக்குழப்பமடைந்துள்ள ரஷ்யத் துருப்புகள் உக்ரேயனில் கூட்டமாகச் சரணடைந்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரேயனில் ரஷ்யத் துருப்புகள் மனக்குழப்பத்திலும் சோர்வடைந்தும் காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல ரஷ்ய இராணுவத்தினருக்கு தாங்கள் உக்ரேயனில் போருக்கு அனுப்பப்பட்டுள்ளோமா? என்பதும் தெரியவில்லை என கூறப்படுகிறது மட்டுமின்றி, உக்ரேயனில் புகுந்துள்ள ரஷ்ய வீரர்களுக்கு உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளும் எரிபொருளும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

மேலும் வெறிச்சோடிய உக்ரேயன் நகரங்களில் உணவுக்காக சில ரஷ்ய இராணுவத்தினர் கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க போர்க்களத்தில் இருந்து தப்பிச்சென்ற நாட்டு வீரர்களையே உக்ரேயன் பாதுகாப்புத்துறையினருக்கு காட்டிக் கொடுக்கும் வேலைகளும் முன்னெடுக்கப்படுவதாக தெரிய வந்துள்ளது. (நி)

## ரஷ்ய படைகளின் தாக்குதலில் எரியும் எண்ணெய்க் கிடங்கு



(கீவ்)
கீவ், கார்கீவ் நகரகளைத் தொடரந்து செர்னிஹிவ் பகுதியை குறிவைத்து ரஷ்யா பயங்கர தாக்குதலை நடத்தி வருகிறது. செர்னிஹிவ் பகுதியில் உள்ள எண்ணெய்க்கிடங்கில் ரஷ்ய படைகள் தாக்குதலை நடத்தியது. இதில் எண்ணெய்க்கிடங்கு தீப்பற்றி கொளுந்து விட்டு எரிகிறது.

இதனால் அப்பகுதியில் கரும்புகை சூழ்ந்துள்ளது. இந்தக் காட்சி காண்பவர்களை பதற்றமடைய வைத்துள்ளது. (நி)

## போர் வேண்டாம்!

### புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உருக்கமான கோரிக்கை



(கீவ்)
உக்ரேயனில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குழு ஒன்று, STOP WAR என எழுதப்பட்ட பதாகையை கையில் வைத்துக்கொண்டு போரை நிறுத்தக் கோரும் புகைப்படங்களால் உலகமே அதிர்ச்சியடைந்துள்ளது. (நி)

## ரத்தக்களறியை உடன் நிறுத்துக

### அமெரிக்கா காட்டம்

(வோஷிங்டன்)
உக்ரேயனுக்கு எதிரான "ரத்தக்களறியை" உடனே நிறுத்த வேண்டும் எனவும், அங்கிருந்து தங்கள் படைகளை திரும்பப் பெற வேண்டும் என வும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை அமெரிக்க வெளியுறவுத் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

படையெடுப்பு குறித்த தகவல்களை சுயாதீன ஊடகங்கள் ஒளிபரப்பும் திறனை தடுப்பதன் மூலம், "ஊடக சுதந்திரம் மற்றும் உண்மையின் மீது முழு தாக்குதலை" ரஷ்யா தொடங்கியிருப்பதாக, அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

மில்லியன் கணக்கான ரஷ்யர்கள் சுதந்திரமான தகவல்களை அணுகவும், உலகம் முழுவதும் ஒருவருக்கொருவரை இணைக்கவும் உதவும் டுவிட்டர், பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடக தளங்களில் ரஷ்யாவின் "அழுத்தத்தை" அமெரிக்கா சுட்டிக்காட்டியது.

முக்கியமான உக்ரேயன் நகரங்கள் மீது ரஷ்யத் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. (நி)

## 7 நாட்களில் உக்ரேயனில் இருந்து 10 லட்சம் பேர் அகதிகளாக வெளியேற்றம்

### ஐ.நா.தகவல்



(ஜெனிவா)
40 இலட்சம் பேர் உக்ரேயனை விட்டு வெளியேறக் கூடும் என்று ஐ.நா. அகதிகள் முகமை கணித்துள்ளது.

கடந்த 7 நாட்களில் மட்டும் உக்ரேயனில் இருந்து 10 லட்சம் பேர் அகதிகளாக வெளியேறியதாக ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது.

உக்ரேயனில் கடுமையாக போர் நடந்து வருவதால் அங்கிருந்து மக்கள் வெளியேறி அண்டை நாடு களில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். போலந்து, ஹங்கேரி, ருமேனியா, சுலோவாக் கியா ஆகிய நாடுகளின் எல்லைகளில் இலட்சக்கணக்கானோர் குவிந்து இருக்கிறார்கள்.

உக்ரேயன் ரஷ்யா மோதல் மேலும் உக்கிரம டைவதால் மேலும் 40 லட்சம் பேர் உக்ரேயனை விட்டு வெளியேறக் கூடும் என்று கணிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் அந்த கணிப்பு அதிகரிக்கலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது.


இதனால் இது இந்த நூற்றாண்டில் மிகப்பெரிய அகதிகள் வெளியேற்றமாக இருக்கலாம் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (நி)

# குண்டு...

## உக்...

### மக்கள் பதுங்கு...

(கீவ்)
உக்ரேயன் தலைநகர் ... வியாழக்கிழமை காலை மு... தாக்குதல்களை மேற்கொ...



தலைநகர் கீவ்வில் நேற்று அதிகாலை அடுத் தடுத்து ... டுகள் ...

## சர்வதேச அளவில்...

(ஜெனிவா)
உக்ரேயன் மீதான ரஷ்யாவின் வலிந்த போருக்கு கண்டனம் தெரிவித்து ஐ.நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர் மானம் பெரும் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தை ஆதரித்து -141 நாடுகள் வாக்களித்தன. ரஷ்யாவுடன், சிரியா, பெலா ரஸ், வட கொரியா மற்றும் எரிட்ரியா ஆகிய 5 நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன.

ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடுகளான இந்தியா, சீனா, பாகிஸ்தான், இல ங்கை உட்பட 35 நாடுகள் தீர்மானம் மீதான வாக்கெடுப்பை புறக்கணித்தன.

உக்ரேயன் மீது ரஷ்யா வலிந்து தொடுத்துள்ள ஆக் கிரமிப்பு போரை நிறுத்த, இராணுவத்தை ரஷ்யா திரு ம்ப பெற வேண்டும் என தீர் மானம் வலியுறுத்துகிறது.

இந்த தீர்மானத்திற்கு கட்டுப்பட...



வே... இல்... டின்... சிய... அத்... வெ... மட்... அவ... என...

## உக்ரேயன் எல்...

### அணு ஆயுதங்களை கு...



(மொஸ்கோ)
உக்ரேயன் நகரங்களை பிடிக்க ... ரஷ்... ள...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# டு வெடிப்புகளால் அதிரும் ரேயன் தலைநகர்

## ங்கு குழிக்குள் தஞ்சம்

**கர் கீவ் ஐ இலக்கு வைத்து நேற்று ல முதல் ரஷ்யப் படைகள் உக்கிர குண்டுத் கொண்டு வருகின்றன.**



டித்து நான்கு வெடி குண் கள் வெடித்ததாக செய்தி கள் வெளியாகியுள்ளன. இந்தக் குண்டு வெடிப்பு களால் நகரமே அதிர்ந்துள் ளது.

மிகவும் சக்தி வாய்ந்த இந்த வெடிகுண்டுகளில் ஒன்று சிட்டி சென்டரிலும் மேலும் இரண்டு ஒரு மெட்ரோ ரயில் நிலையம் அரு கிலும் வெடித்துள்ளன.



இந்நிலை யில் நகரில் விமானத் தாக்குதல் குறித்து எச்சரிக்கும் ஒலிகள் தொடர்ந்து ஒலிக்க விடப்பட்டு ள்ளன.

இதனால் நகரப் பகுதியில் உள்ளவர்கள் தொடர்ந்தும் பதுங்கு குழிகளுக்குள் உள் ளதாகவும் அங்கிருந்து வெளியாகும் தக வல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கீவ் நகரம் மீது உக்கிர தாக் குதல் நடத்தப்படும் என ரஷ்யா நேற்று முன்தினம் எச்சரித்திருந்தது.

அங்குள்ள பொதுமக் களை நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு முன னர் உடனடியாக வெளி யேறி வேறு பகுதிகளுக்குச் செல்லுமாறு எச்சரிக்கப்பட் டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. (நி)

## ில் தனிமைப்படுத்தப்பட்ட ரஷ்யா



வேண்டிய அவ சியம் ரஷ்யாவுக்கு இல்லா விட்டாலும், இது அந்நாட் டின் மீது உலக அளவிலான அர சியல் அழுத்தத்தை அதி கரிக்கும். அத்துடன், தீர்மா னத்தின் மூலம் வெறும் 5 நாடுகளின் ஆதரவை மட் டுமே பெற்று ரஷ்யா சர்வ தேச அளவில் தனிமைப் படுத்தப்பட்டுள் ளமையும் வெளிப்பட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை யால் அழைக்கப்பட்ட ஒரு அரிய அவச ரகால அமர்வு இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்பட்ட செயற்பாட்டுடன் முடிவுக்கு வந்தது.

இதற்கு முன்பு 1997 ஆம் ஆண் டில் பாலஸ்தீனம், ஜெருசலேம் விவகாரத்தை விவாதிப்பதற்காக ஐ.நா. சபையால் இவ்வாறான ஒரு அவசரகால அமர்வு கூட்டப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## எல்லையில் ா குவிக்கும் ரஷ்யா



ரஷ்யா தீவிர தாக்குதலில் ஈடுபட்டு ள்ள நிலையில் இப்போது எல்லை யில் அணு ஆயுதங்களையும் ரஷ்யா குவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்க ரஷ்ய ஜனாதிபதியின் அனுமதி வேண்டும்.

இதற்கான அனுமதி பெட்டகம் புடினிடம் உள்ளது. இதன் பெயர் செகட். புடின் உத்தரவிட்டால் அணு ஆயுதங்கள் உக்ரேய்ன் நோக்கி பறந்து செல்லும். அணு ஆயுத ங்கள் வெடிக்கும் பகுதியில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்திற்கு சர்வ நாசம் விளையும். இதன் தாக்கம் பல ஆண்டுகளுக்குத் தொ ரும். (நி)

# புடினுடன் தொடர்புடைய

## ரஷ்யக் கப்பலை கைப்பற்றியது ஜேர்மனி

(பெர்லின்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடினுடன் தொடர்பு டைய ரஷ்யாவைச் சேர்ந்த பெரும் செல்வந்தரான அலிஷர் உஸ் மானோவ் என்பவருக்குச் சொந்தமான 600 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள கப்பல் ஒன்றை ஜேர்மன் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தில்பார் என்று பெயரிட ப்பட்ட 512 அடி நீளமான இந்தக் கப்பல் ஹாம்பர்க்கில் கைப்ப ற்றப்பட்டது.

ரஷ்ய அரசாங்கத்துட னான உறவுகள் தொடர்பாக ஐரோ ப்பிய ஒன்றியத்தால் தடை



விதிக்கப்பட்ட 25 முக்கிய ரஷ்ய ர்களுள் உலோக தொழிலதிப ரான உஸ்மானோவ் ஒருவரா வார்.

இந்நிலையில் ரஷ்யாவி ற்கு சொந்தமான வேறு கப்பல்கள் அமெரிக்காவுடன் குற்றவாளி களை ஒப்படைக்கும் ஒப்பந் தத்தில் இல்லாத நாடுகளை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின் றன.

குறிப்பாக இந்தியப் பெரு ங்கடலில் உள்ள மாலைதீவு நோக்கி ரஷ்யக் கப்பல்கள் நகர் வதாகவும் தெரியவரு கிறது. (நி)

# உக்ரேய்ன் ஜனாதிபதியுடன் பேசி ஆதரவை தெரிவித்தார் கனடா பிரதமர்

(ரொரண்டோ)

ஜனாதிபதி ஜெலென்ஸ் கியின் சிறந்த துணிச்சலை யும், முன்னணித் தலைமை யையும் கனடா பிரதமர்ட் ரூடோ பாராட்டி னார். இது கனேடியர்களுக்கும் உல கெங்கிலும் உள்ள மக்களுக் கும் உத்வேகம் அளிப்பதாகக் அவர் தெரிவித்தார்.

உக்ரேய்ன் மீதான ரஷ் யாவின் வலிந்த தாக்குதலு க்கு பொறுப்பேற்க செய்யும் வகையில் கனடா ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமைக்காக இதன போது பிரதமர் ட்ரூடோவுக்கு உக்ரே ய்ன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி நன்றி தெரி வித்தார்.

உக்ரேய்னிய மக்களுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பது டன், உக்ரேய்னின் இறை யாண்மை பிரதேசத்தின் மீதான நியாயமற்ற மற்றும் சட்டவிரோத ஆக்கிரமிப் புக்கு ரஷ்யாவை பொறுப்பேற்க செய்யும் வகையிலும் நேச நாடுகள் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் தனது உறுதிப்பாட்டை பிரதமர் ட்ரூடோ இதன்போது மீண் டும் வலியுறுத்தினார்.

உடனடியாகவும் எதிர் காலத்திலும் உக்ரேய்னுக் கான கனடாவின் உதவிகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

அத்துடன், ஜனாதிபதி ஜெலென்ஸ்கி பாதுகாப்பாக இருக்க வேண்டும் என இதன் போது ட்ரூடோ கேட்டுக்கொண்டார் எனவும் கனேடிய பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறி ப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கான நீதியை சர்வதேச சமூகம் மிக விரைவில் வழங்க வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

**(நெளுக்குளம்)**

**இம்முறை இடம்பெறும் ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்விலாவது எமக்கான நீதி கிடைப்பதற்கு வழிபிறக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் நேற்று வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**


ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பத்து வருடங்கள் கடக்கின்ற நிலையில் எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது.



தொலைத்த தமது பிள்ளைகளை காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்து விட்டனர். வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்திற்கு வருவோமா என்ற நம்பிக்கை அற்ற நிலையில் இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இலங்கையில் இனப்படு கொலை தொடர்ச்சியாக இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டுமானால் ராஜபக்ஷ குடும்பமும் இனப்படுகொலைகளுக்கு பொறுப்பாக இருந்த படைத்தளபதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும்.

யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணா மல் ஆக்கப்பட்டோர் என தெரிவித்து அவர்களின் குடும்பங்களை ஏமாற்றுகின்றது. எனவே சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்க வேண்டும். இம் முறை இடம்பெற்றுவரும் ஜெனிவா மனித உரிமைப் பேரவை அமர்விலாவது உறு தியான தீர்மானங்கள் எடுக் கப்பட்டு எமக்கான நீதி நிலை நாட்டப்பட வேண்டும். அதற்கு உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும். எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என அவர்கள் தெரிவித்தனர். (நி-299)

## மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகுதி மாத்திரைகள் மீட்பு



(மன்னார்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மாத்திரைகளை இராணுவத்தினர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை மீட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், நடுக்குடா இராணுவத்தினரின் உதவியுடன் குறித்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது ஒரு தொகுதி மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டன. சோதனையின் போது குறித்த மாத்திரைகள் உடல் வலியை குறைப்பதற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகள் என தெரிய வந்துள்ளதோடு, குறித்த இரு பெட்டிகளில் இருந்து 60 ஆயிரம் மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளது.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட மாத்திரைகளை மேலதிக நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-285)

## கால்பந்தாட்ட வீரர் பியூஸ்லஸின் பூதவுடல் நாட்டை வந்தடைந்தது

(மன்னார்)

மாலைதீவில் கடந்த மாதம் 26 ஆம் திகதி மரணமடைந்த இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இலங்கை வந்தடைந்தது.

இந்த நிலையில் குறித்த பூதவுடல் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பூதவுடலை பெற்றுக் கொள்ள அவருடைய மனைவி மற்றும் குடும்பத்தினர் நீர்கொழும்பு மருத்துவமனைக்கு சென்றுள்ளனர்.

சடலப் பரிசோதனையின் பின் பூதவுடல் மனைவியிடம் ஒப்படைக்கப்படவுள்ள நிலையில் உடல் யாழ்ப்பாணத்துக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படும். நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் பனங்கட்டுக் கொட்டிலில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு அஞ்சலிக்காக எடுத்து வரப்படும்.(4-6-285)



பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் பருத்தித்துறை தற்காப்பு கலையக மாணவியான ஜீவகாந்தன் கென்சி அண்மையில் இடம்பெற்ற அகில இலங்கை ரீதியான இணைய வழி காட்டாப் போட்டியில் பங்குபற்றி தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

(படம் : மகாலிங்கம்)

## கஞ்சாவுடன் கைது 10 ஆயிரம் அபராதம்

(அராலி)

புளியங்கூடல் வடக்கு பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2400 மில்லிக் கிராம் கஞ்சாவுடனும், வேலணை - வங்களாவடி, 1 ம் வட்டாரத்தைச் சேர்ந்த 40 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2000 மில்லிக்கிராம் கஞ்சாவுடனும், நேற்று முன்தினம் காலை ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் அன்றைய தினமே ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்கள் இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் தண்டத்தினை ஊர்காவற்றுறை நீதிமன்றம் விதித்தது. (4-6-104)




வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிக கற்கைகள் பீட த்தின் மனிதவள முகாமைத்துவத் துறை மற்றும் பட்டய பணியாளர் மேலாண்மை நிறுவனம் என்பவற்றிற்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. (படம் : [illegible])

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 360 | 500 |
| தக்காளி | 300 | 240 | 240 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 120 | 140 |
| கரட் | 250 | 350 | 380 | 440 |
| பூசணி | 140 | 250 | 140 | 150 |
| புடோல் | 160 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 100 | 100-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 120-170 | 180 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 350 |
| வெண்டிக்காய் | 180 | 220 | 170 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 150 | 300 | 250 | 300 |
| லீக்ஸ் | 130 | 100 | 170 | 200 |
| பீற்றூட் | 180 | 150 | 220 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 350 | 250 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1400 |
| போஞ்சி | 240 | 200 | 140 | 320 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 120 | 120 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 150 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 150 | 240 |
| முள்ளங்கி | 50 | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | — | — | 80 | — |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலத்தை நாமே தீர்மானிப்போம்

## அமெரிக்க பிரஜைக்கு அடிபணியமாட்டோம்

(கொழும்பு)

**நாட்டின் எதிர்காலத்தை நாமே தீர்மானிப்போம். அமெரிக்க பிரஜையின் அதிகார செயற்பாட்டிற்கு நாம் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் தெரிவித்துள்ளார்.**



அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகள் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், "நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லை என்ற நிலைமை தற்போது தோற்றம் பெற்றுள்ளது. அமைச்சரவையின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்த வேண்டிய நிலையே உள்ளது.

ருவன்வெலிசாய முன்னிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளதா? இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் படி சுபீட்சமான கொள்கை திட்டத்திற்கமைய அரசாங்கம் செயற்பட வேண்டும் என்பதை தொடர்ந்தும் வலியுறுத்துகிறோம்.

நாட்டின் எதிர்காலத்தை நாமே தீர்மானிக்க வேண்டும். இங்கு ஒன்றுகூடியிருக்கின்ற 11 பங்காளிக் கட்சிகளும் ஒன்றிணைந்த சக்தியாக செயற்படுவோம்" என அவர் தெரிவித்தார். (நி)

# ஆணவப் போக்கில் செயற்பட்டால் சவால்களை எதிர்கொள்ள முடியாது

## பசிலை விளாசிய விமல்

(கொழும்பு)

"எனக்கு மூளை உள்ளது, எனவே, நிபுணர்களின் ஆலோசனை தேவையில்லை எனக்கூறி, ஆணவப்போக்கில் செயற்படுபவர்களால் சவால் களை எதிர்கொள்ள முடியாது. நெருக்கடி நிலைமைகளை சுட்டிக்காட்டி, ஒன்பது கடிதங்களை அனுப்பிய மத்திய வங்கி ஆளுநருக்கு நிதி அமைச்சரை சந்திக்க நேரம் வழங்கப்படவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரச பங்காளிக்கட்சிகளின் முக்கிய கூட்டமொன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது. இதன்போது நாட்டை மீட்டெடுப்பதற்கான யோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, நிதி அமைச்சர் பசிலை, அமைச்சர் விமல் விளாசித்தள்ளியுள்ளார்.

நாடு கடும் அந்நியசெலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் மத்திய வங்கி ஆளுநருக்கு நிதி அமைச்சரை சந்திக்க முடியவில்லையெனில், பிறகு நிலைமையை விளக்கவா வேண்டும்? இனி மேலும் எம்மால் மௌனம் காக்க முடியாது.



அதனால்தான் உண்மையை வெளிப்படுத்துகின்றோம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இளைஞர்களிடையே காது கேளாமை அதிகரிப்பு

(கொழும்பு)

இளைஞர்களிடையே காது கேளாமை அதிகரித்து வருகிறது. செவித்திறன் கருவிகளின் பாவனை அதிகரித்துள்ளமையே இந்நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளதென தொண்டை, காது, மூக்கு தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் யசத் வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உலக செவித்திறன் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். (நி)

# 4 வாரங்களின் பின் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் 4 வாரங்களுக்கு பின்னர், அதிகளவிலான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஔடத ஒன்றியத்தின் தலைவர் ஏ.ஜே.பஸ்நாயக்க இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக மருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணய கடிதங்கள் விடுவிக்கப்படாமையே இந்த நிலை ஏற்பட காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இன்று ஒரு தகவல்

## நீங்கள் சொல்வதை எல்லோரும் கேட்க வேண்டுமா?

இதில் இரண்டு வகை உண்டு.

முதலாவது வெறுமனே கேட்பது. மேலும் சற்று தெளிவுபடுத்த வேண்டுமானால் இதை மேடைப் பேச்சுடனோ இசை நிகழ்ச்சியுடனோ கதாகாலட்சேபத்துடனோ ஒப்பிடலாம். இரண்டாவது வகை, பேச்சைக் கேட்டுப் பின்பற்றி அதன்படி மற்றவர்கள் நடக்க வேண்டுமென எதிர்பார்ப்பது.

இவற்றில் முதலாவதைப் பற்றிச் சுருக்கமாகவும் இரண்டாவதைப் பற்றிச் சற்று விளக்கமாகவும் தெரிந்துகொள்வோம்.

முதலாவது வகையைப் பொறுத்து அளவில் மக்கள் இரசனையை உணர்ந்து செயற்படும் திறன் வேண்டும். இது ஒன்றே தலையாயது, மக்கள் இரசனையைப் புரிந்துகொள்வது என்பதை வார்த்தைகளால் உணர்த்த முடியாது. இதை அனுபவத்தால் மட்டுமே பெற முடியும்.

குரலில் ஏற்ற இறக்கங்கள் அவசியம்.

ஏனோதானோ எனப் பேசாமல் ஆர்வம் மேலிடச் சொல்ல வேண்டும். சொல்லப்படும் விடயமும் சுவாரசியமானதாய் இருக்க வேண்டும்.

தெளிவுறச் சொல்ல வேண்டும் சொல் தடுமாற்றமோ கருத்துத் தடுமாற்றமோ இருக்கக் கூடாது.

மிக மெதுவாகச் சொல்லக்கூடாது. அது எரிச்சலைத் தரும்.

தர்க்கம் இருக்க வேண்டும். எங்கெல்லாம் ஐயம் எழக்கூடும் என்பதை உணர்ந்து அவ்விடங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

முகபாவம் முக்கியம். கண்களில் பிரகாசமான உணர்வை வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

இனி இரண்டாவதைப் பற்றிப் பார்ப்போம்.

மேற்கூறிய யாவும் இரண்டாவது வகைக்கும் பொருந்தக் கூடியவைதாம்.

நீங்கள் சொல்வதை மற்றவர் பின் பற்றி நடக்க வேண்டுமென்றால் உங்களிருவரிடையே எவ்வகையிலேனும் ஒரு சிறு பிடிப்பு இருக்க வேண்டும்.

அது உறவாக இருக்கலாம்; நட்பாக இருக்கலாம்; தொழில் ரீதியான தொடர்பாக இருக்கலாம்.

உதாரணமாக உங்கள் காலை வைக்க முடியாதபடி ஒரு பெட்டியை இடைஞ்சலாக வைத்திருக்கிறார் ஒரு சகப் பிரயாணி. நீங்கள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டிய கட்டாயம் எதுவும் அவருக்கு இல்லை. இத்தகைய நிலையில் குரலில் கனிவைக் கலக்க வேண்டும். குழைந்து பேச வேண்டும். மாறாக, மிரட்டிப் பணிய வைப்பது என்பது கோழை விடயத்தில் கூடத்தோற்றுப் போய்விடும்.

முன் கூறிய முதல்வகைப் பிரிவினராய் இருக்கும் பட்சத்தில் –

இவர் தீர்க்க தரிசனமும் போதுமான உலக அறிவும் உள்ளவர்; இவர் வழியில் செல்வதால் எந்தவிதக் கோளாறும் நேராது.

இவர் நம் நலத்தின் மீது அக்கறை கொண்டவர்தான்; நம் நன்மைக்காகத்தான் சொல்கிறார்; அவர் சொல்லும் செயலில் எந்தவிதமான சுயநலமும் இல்லை; நம்முடைய கடமையைத்தான் அவர் உணர்த்துகிறார் என்றெல்லாம் மற்றவர்களை நீங்கள் மனப்பூர்வமாக நம்பச் செய்ய வேண்டும். இத்தகைய நம்பிக்கையை நீங்கள் ஏற்படுத்தாமல் நான் சொல்வதை யார் கேட்கிறார்கள்?" என்று புலம்பிப் புண்ணியமில்லை.

மாறாக–

மேற்கூறிய முயற்சியில் நீங்கள் வெற்றி பெற்று விட்டால்–

உலகம் –

உங்கள் பின்னால் ஒரு நாய்க்குட்டியாய்த் தொடர்ந்து வரும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

## அம்புலி மாமா கதைகள்

## விதியை மீற முடியுமா?



அதற்குப் பின் தான் அறிந்து கொண்ட இரகசியத்தை வேறு யாரிடமும் கூறவில்லை. சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் அவ்வூர்ப் பிரமுகர் ஒருவர் இறந்து விட்டார். அவர் தாராள மனம் கொண்டவராக இருந்தார்.

தான தர்மங்களை ஏராளமாகச் செய்தவர். எனவே அவரை அந்த ஊரார் கடவுளுக்குச் சமமாகக் கருதி வந்தனர்.

அவர் ஒரு மாத காலமாகவே நோயுற்று படுக்கையில் கிடந்தார். மருத்துவர்கள் மருந்துகளை எல்லாம் மாற்றிக் கொடுத்துப் பார்த்தார்கள்.

ஆனால் எந்தப் பலனும் ஏற்படவில்லை. காலை வேளையில் அந்தப் பிரமுகர் வீட்டு வாசலில் கூட்டம் நிற்பது கண்டு சின்னப்பன் என்னவென்று பார்க்கப் போனான்.

அப்போது சிலர் "விதி யாரை விட்டது? மருத்துவர்களால் என்ன செய்ய முடியும்? மருந்து தான் கொடுக்க முடியும். உயிரையா கொடுக்க முடியும்?" என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதைச் சின்னப்பன் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் உடனே "இறந்து கிடக்கும் இவரைப் பிழைக்க வைக்கும் வழி எனக்குத் தெரியும்.

நான் மாடு மேய்க்கப் போகும் இடத்தில் சஞ்சீவினி செடி உள்ளது" எனக் கூறி தான் இறந்த பிராணிகளை உயிர்ப்பித்த விதத்தையும் கூறினான்.

பலர் அவன் சொன்னதை நம்பவில்லை. ஓரிருவர் மட்டும் "நியமாகவா?" என்று கேட்கவே சின்னப்பன் அவர்களை அழைத்துக் கொண்டு தான் சஞ்சீவினிச் செடிகளைப் பார்த்த இடத்திற்குச் சென்றான்.

ஆனால் இந்த இடத்தை அடைந்த போது அவன் திடுக்கிட்டு நின்றான். ஏனெனில் தினமும் அவன் பார்த்த செடிகள் அன்று அங்கே தென்படவில்லை. அவன் "திரு திரு"வென்று விழித்தான். அவனோடு வந்தவர்கள் அவனைக் கோபித்துக் கொண்டு இரண்டு அடிகள் கூட கொடுத்தனர்.

தினமும் தான் கண்டு வந்த அந்தச் செடிகள் எப்படி மாயமாகின என்று சின்னப்பன் யோசிக்க அவன் தலை தான் சுழன்றது.

அவன் மனதில் "ஆமாம் விதியை யாரும் வெல்ல முடியாது தான். அதனால் தான் அந்தப் பிரமுகரை உயிர்ப்பிக்க விடாமல் சஞ்சீவினிச் செடிகள் மாயமாய் மறைந்து விட்டன போலும்" என்று கூறிக் கொண்டு ஆறுதல் அடைந்தான்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




இராமனைச் சந்தித்துப் பரசுராமன் தன் கை வில்லைக் காட்டி, இதை வளைப்பது இருக்கட்டும் முறிப்பது கிடக்கட்டும், எடுத்துத் தூக்க முடியுமா? என்று கூறி அவன் வீரத்தைத் தூண்டி ஊக்குவித்தான்.

"தூக்கவும் முடியும்; அதைக் கொண்டு தாக்கவும் முடியும்" என்றான் இராமன். "முதலில் இதனைத் தூக்கி வளை" என்று அந்த இளைஞனை அழைத்தான் பரசுராமன்.

இராமன் அந்த வில்லைத் தன் கையில் வாங்கி, வளைத்துக் காட்டி, அதன் நாணையும் ஏற்றி, அம்பும் குறி வைத்தான்.

"இதற்கு இலக்கு யாது?" என்று கேட்டான். "வல்லவன் என்று செருக்கித் திரிந்த புலவன் யான்; என்னை இலக்கு ஆக்குக" என்றான் பரசுராமன்.

"பகையற்ற உன் மீது மிகை அற்ற நான், அம்பு ஏவமாட்டேன்" என்றான் இராமன். "வம்புக்கு இழுத்தேன்; அதற்குரிய விலை தந்து தான் ஆக வேண்டும்" என்றான் பரசுராமன். அவன் விட்ட அம்பு அவன் ஈட்டிய தவத்தை வாரிக் கொண்டு இராமனிடம் சேர்ந்தது. முனிவன் தன் தவமும் வல்லமையும் இழந்து, அடங்கிச் சினமும் ஆணவமும் நீங்கித் திருந்தி அமைந்தான்.

பரசுராமன் அரசுராமனிடம் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு கால் சென்றவழி தவம் செய்ய இமயமலைச் சாரலை நோக்கிச் சென்றான். இராமன் என்றால் கோதண்டராமன் தான் என்று உலகம் பேசும்படி அவன் புகழ் பன்மடங்காகியது.

தவமுனரிவனிடம் வென்று பெற்ற வில் அப்பொழுது தேவைப்படவில்லை; அதனை வருணனிடம் தந்து பாதுகாப்பாக வைத்திருக்கும்படி இராமன் ஆணையிட்டான். அது பிற்காலத்தில் கரனோடு போர் செய்யும்போது பயன் பட்டது; அவன் சிரம் நீக்க இந்த வில்லைக் கேட்டுப் பெற்றான்; தக்க சமயத்தில் உதவியது; பரசுராமனிடம் பெற்ற பரிசு இந்த வகையில் அவனுக்குப் பயன்பட்டது. பரசுராமன் வடக்கு நோக்கி விடை பெற்றதும் அடக்கமாகத் தந்தையை அணுகித் தன் வெற்றியை விளம்பினான் இராமன். அச்சம் நீங்கித் தசரதன், நல்லுணர்வு பெற்றுக் களிப்பு என்னும் கடலுள் ஆழ்ந்தான். தீமை விலகிற்று என்பது ஒன்று; இராமன் வெற்றி பெற்றான் என்ற சிறப்பு மற்றொன்று.

துயரமும் அபூர்வும் நீங்கி அனைவரும் இனிமையாய் அயோத்தி அடைந்தனர். மாற்றம் அல்லது ஏற்றம் எதுவும் இல்லாமல் தசரதன் வாழ்க்கை சென்றது. மணம் செய்து கொண்டு வந்த பரதனை அவன் பாட்டனார் அழைத்து, விருந்து வைப்பதற்கு அழைப்பு அனுப்பினார். கேகய மன்னன் விடுத்த செய்தியை இராமனின் அடுத்த தம்பியாகிய பரதனிடம் தசரதன் எடுத்துக் கூறினான்; "நீ சில நாள் சென்று தங்கி வருக" என்று சொல்லி அனுப்பனான். பரதனும் தசரதனிடம் விடை பெற்றுக் கொண்டு இராமனை வணங்கிப் பிரிய மனமில்லாமல் அரிதிற் பிரிந்தான். இராமனை அவன், தன் உயிரையும்விட மிக்கு நேசித்தவன் ஆதலின், பிரிவிற்கு மிகவும் வருந்தினான். செல்லும் இடம் அவனுக்குத் தேனிலவாக இல்லை; நிலவு இல்லாதவானாக இருந்தது.

இவனை அழைத்துச் செல்லத் தாய் மாமன் உதயசித்து வந்திருந்தான். அவன் ஓட்டிய தேரில் கேகய நாட்டை நோக்கிச் சென்றான். அவனோடு இளையவனான சத்துருக்கனனும் சென்றான். நாட்கள் ஏழு அவன் ஊர் செல்வதற்கு இடையிட்டன. ஏழாம் நாள் அவர்கள், தம் தாய் பிறந்த நாட்டை அடைந்தனர்.

தசரதனும் ஆட்சிப் பீடத்தில் தொடர்ந்து அமர்ந்து மக்களுக்குக் காட்சி தந்து தனக்கு உரிய கடமைகளைச் செம்மையாய் ஆற்றிக் கொண்டிருந்தான். புயலுக்கு முன் அமைதி, அது அவன் மன நிறைவுக்குத் துணை செய்தது. எதுவுமே நிலைப்பது இல்லை; மாற்றங்கள் வரக் காத்துக் கொண்டிருந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறக்கம் சகல கவலைகளையும் மறக்கச் செய்வது போல், இறைவனுடைய திருவடித் தியானம் சகல கவலைகளையும் துறக்கச் செய்கின்றது.
– *அமுதவாக்கு*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நான் உப்பு விற்கப்போனால் மழை... மண்ணெண்ணெய் குக்கர் வாங்கினால்...

*நான் உப்பு விற்கப் போனால் மழை கொட்டோ கொட்டென்று கொட்டுது...* என்றொரு பாடல் உண்டு.

இந்தப் பாடல் ***ஆ ஈன மழை பொழிய இல்லம் வீழ...*** என்ற தனிப்பாடல் வேரில் இருந்து முளைத்ததெனலாம்.

எதைச் செய்தாலும் அது நட்டமாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, கஷ்டமும் துன்பமும் தொடர்ந்து வந்தவண்ணமுள்ளதென்பதை வெளிப்படுத்துவதாக அந்தப் பாடலின் பொருள் அமைகிறது.

இந்த அபத்தமான நிலைமையை இலங்கை மக்கள் தற்போது அனுபவித்துக் கொண்டிருப்பதைக் காண முடியும்.

அந்தோ! பொருட்களின் விலைகள் கண்டபாட்டில் எகிறுகின்றன என்ற மன வெதும்பலோடு இருந்த மக்களுக்கு; இப்போது அந்தப் பொருட்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதெனும்போது, இனி வாழ முடியாதென்ற கட்டத்துக்கு நிலைமை வந்துவிடுகிறது.

ஆக, மனித வாழ்வியலோடு ஒன்றித்துப் போன எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட, அனைத்துத் தொழல் முயற்சிகளும் அம்போ என்றாயின.

அதிலும் குறிப்பாக, டீசல் மற்றும் மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் நாட்டில் ஏற்பட்டுள்ள திண்டாட்டம் சொல்லிமாளா.

ஆம், டீசல் நிரப்புவதற்காக வாகனங்கள் பல மைல் தூரத்துக்கு வரிசையில் காத்திருப்பதைப் பார்க்கும்போது எத்தனை மனித மணித்தியாலங்கள் வீணாகிப் போகின்றன என்பதை உணர முடியும்.

டீசல் இன்மையால் வாகனங்கள் செயலிழுந்துபோக, கட்டுமானப் பணிகள் உட்பட அத்தனை வேலைத்திட்டங்களும் ஸ்தம்பிதமடைகின்றன.

இஃது நாளாந்தத் தொழில் இழப்பை ஏற்படுத்திவிட, தொழிலாளர் வர்க்கத்தின் சீவனோபாயம் இடர்பாட்டுக்குட்படுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், மறுபுறத்தில் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டை என்சொல்வது, ஏழரை மணித்தியால மின்வெட்டின்போது குப்பி விளக்கை ஏற்றுவதாயினும் மண்ணெண்ணெய் இல்லை எனும்போது என்னதான் செய்ய முடியும்.

இதையும் கடந்து, எரிவாயுவின் மூலக்கூறுகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறின.

எரிவாயு அடுப்பென்ன, சிலிண்டர்கள் வெடித்தாலும் சமைத்தேயாக வேண்டும் என்ற அடிப்படையில் மக்கள் எரிவாயுவைத் தொடர்ந்தும் பயன்பாட்டில் வைத்திருந்தபோது அதற்கும் தட்டுப்பாடு ஏற்பட, அதிக விலைகொடுத்து மண்ணெண்ணெய் குக்கர் வாங்கினால்; கடவுளே! இப்போது மண்ணெண்ணெய்யும் கிடையாதாம்.

இங்குதான் உப்பு விற்கப்போனபோது கடும் மழை பெய்ததும் எரிவாயு தட்டுப்பாடு என்பதால் குக்கர் வாங்க; மண்ணெண்ணெய் இல்லாமல் போனதும் ஒன்றென உணர முடிந்தது.

# நாணய நிதியத்தின் அறிக்கையை மக்களுக்கு வெளிப்படுத்துங்கள்

## அரசிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில் , அரசாங்கம் அடுத்த கட்டமாக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் உடனடியாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முறையான திட்டமிடலுடன் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா? இல்லையா? என்பதையும் அரசாங்கம் தெளிவாக அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.(ம)

## சுருவில் கடலிலிருந்து ஒருவரது சடலம் மீட்பு

(அராலி)

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுருவில் பகுதி கடலிலிருந்து நபர் ஒருவரது சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

செல்லத்துரை விமலகுமார் (வயது - 64) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலமானது பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(ம-104)

## இலங்கைக்கு எரிபொருளை வழங்க இந்தியா இணக்கம்

எரிசக்தி நெருக்கடியை எதிர்கொள்ளும் இலங்கைக்கு உதவ இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் (IOC) 12-13 எரிபொருள் சரக்கு தாங்கிகளை வழங்குவதாக குறித்த நிறுவனம் ரொய்ட்டர்ஸ் செய்திசேவைக்கு வழங்கிய ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அடுத்த 4-5 மாதங்களில் இலங்கைக்கு பெட்ரோல் மற்றும் ஜெட் எரிபொருளை வழங்குவதாக ஐ.ஓ.சி தெரிவித்துள்ளது.

"எரிபொருட்களை வாங்குவதற்காக இலங்கைக்கு இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 500 மில்லியன் டொலர் கடன் வட்டியின் கீழ் இந்த பொருட்கள் வழங்கப்படும்" என குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பிரதேச சபை உறுப்பினர் வீட்டின்மீது தாக்குதல்

(அராலி)

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் ஜிப்பிரிக்கோவின் வீட்டில் தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று இரவு போதையில் வந்த நபர் ஒருவர் பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள அவரது வீட்டிற்குள், மின்சாரம் துண்டிக்கப்பட்ட நேரத்தில் புகுந்து தாக்குவதற்கு முயற்சித்ததோடு தடுக்கமுயன்ற பிரதேச சபை உறுப்பினரின் தந்தையையும் கீழே தள்ளி தாக்கியதுடன் வீட்டின் கேற்றையும் வேலித் தகரங்களையும் சேதமாக்கி வீட்டிலிருந்த பெண்களையும் அச்சுறுத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(ம-104)

## மார்ச் 8 முதல் 11 வரை பாராளுமன்றம் கூடுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி முதல் நான்கு நாட்களுக்கு கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சி தலைவர்களுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மார்ச் மாதம் 8 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## வவுனியா கற்பகபுரத்தில் பெண் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா கற்பகபுரம் பகுதியில் பெண் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த பெண் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கற்பகபுரம் பகுதியில் அமைந்துள்ள காணி விவகாரம் தொடர்பாக குறித்த பெண்ணுக்கும் அவரது உறவினரான ஆண் ஒருவருக்கும் முரண்பாடு இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த முரண்பாடு முற்றிய நிலையில் குறித்த நபரால் அப்பெண் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் காயமடைந்த பெண் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினையும் பதிவு செய்துள்ளார்.

இதேவேளை குறித்த நபர் தங்களை தகாத வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தி திட்டியதுடன் தமது கைதொலைபேசியையும் உடைத்ததாக பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

(ம-299)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### செய்தி வெள்ளம்

இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் ஸ்ரீ ஸ்ரீ வருவதால், அகமதாபாத் நகரம். முழுவதும் முறுக்கிவிடப் பட்டிருந்தது. மாபெரும் சத்சங்கமாக அமைய வேண்டும். என்ற கருத்தில், குஜராத் மாநிலத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களும் . ஒருங்கே பணியாற்றினர். காலையில் சுதர்சன் கிரியா ஸ்ரீ ஸ்ரீ அவர்களால் நேரடியாக நடத்தப்பட்டது.இதில் 25 000 பேர் கலந்து கொண்டனர். ஆழ்ந்த அனுபவங்கள், மிகச் சிறந்த நறுமணங்கள் சீதோஷ்ண நிலை மாற்றங்கள் ஆகியவை நிகழ்ந்த போது ஒரு பறவைக் கூட்டத்துடன் சேர்ந்து, மூன்று கருடன்கள் [illegible]த்தின் [illegible] (Cosmic [illegible]) [illegible] ஆரம்பித்து விட்டது என்று சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

மற்ற இடங்களில் இறைவனை நினைத்து தியானிப்பதானாலும் ,துதிப்பதனாலும் வழிபடுவதனாலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால்,வினைகள் வெந்து எரிந்து, கரிந்து நீறாகி விடுகின்றன.

இறைவன் அறிவு வடிவானவர். அறிவே வடிவான ஆண்டவனை அறிவு என்ற ஒன்றினாலேயே அறிதல் வேண்டும். ஆனால் நூலறிவு அன்று. அனுபவத்தால் உண்டான மெய்யுணர்வு. திருவள்ளுவர் மெய்யுணர்வு என்ற ஓர் அதிகாரத்தில் இதனை உணர்த்துகின்றார்.

வாழை நாரால் மலர் தொடுக்கலாம்.மத யானையைக் கட்ட முடியாது. ஏணி வைத்து மாடி மீது ஏறலாம். இமயத்தின் உச்சியாகிய எவரெஸ்டுக்கு ஏற முடியாது; படியினால் நெய்யை அளக்கலாம்; கடல் நீரை அளக்கலாகாது.அது போல், நூலறிவினால் பொருள்களையறியலாம். இறைவனையடைய முடியாது.

(தொடரும்)



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 10

அதன் பிரகாரம், உறுப்பினர்களின் எண்ணிக்கை கொழும்பு-40, கம்பஹா-40, களுத்துறை-22, கண்டி-29, மாத்தளை-11, நுவரெலியா-16, காலி-22, மாத்தறை-17, அம்பாந்தோட்டை-14, யாழ்ப்பாணம்-16, கிளிநொச்சி-4, மன்னார்-5, வவுனியா-6, முல்லைத்தீவு-5, மட்டக்களப்பு-11, அம்பாறை-14, திருகோணமலை-10, குருநாகல்-34, புத்தளம்-16, அநுராதபுரம்-21, பொலநறுவை-10, பதுளை-18, மொனராகலை-14, இரத்தினபுரி-24, கேகாலை-18 ஆகும்.

### மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்க எல்லை நிர்ணயக்குழு எடுத்த நடபடிகள்

எல்லை நிர்ணயக் குழு தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்குகையில் பயன்படுத்திய அளவீட்டு முறைகள்:2017 ஆம் ஆண்டின் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறு முதன்மை சட்டவாக்கத்தின் 3அ(1) முதல் 3அ(11) வரையிலான பிரிவுகளினூடாக குழுவினால் தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்கையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை தெளிவுடுத்தப்பட்டுள்ளது. இச் செயன்முறையில் அனைத்து தேர்தல் தொகுதிகளினதும் எல்லை நிர்ணயம் தொடர்பாக குழு ஒரினத்தன்மை வாய்ந்த தீர்மானங்களை எடுத்து; செயற்படுத்துவதை அத்தாட்சிப்படுத்த வேண்டியிருந்தது.

அதற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவீட்டு முறைகளின் அடிப்படையில் குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற ஆலோசனைகள், கருத்துரைகள் என்பவற்றை நன்கு ஆராய்ந்து நடவடிக்கையெடுக்க குழு தீர்மானித்தது.

i. 3அ (2) ஆம் பிரிவு: தேர்தல் தொகுதிகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 50 சதவீதத்திற்கு சமமான பிரதிநிதிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

தேர்தல்கள் ஆணையாளரினால் மாகாண சபையொன்றின் ஒவ்வொரு நிர்வாக மாவட்ட மட்டத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் தேர்தல் தொகுதிகளை கருத்திலெடுத்துத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 50 சதவீதத்திற்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை எல்லை நிர்ணயம் ஆணைக்குழு தீர்மானிக்க வேண்டியிருந்தது.

அவ்வெண்ணிக்கையைக் கணக்கிடுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 ஆல் வகுக்கப்பட்டது.

அவ்வாறு வகுக்கின்றபோது 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களிலிருந்து தொகுதிவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை பூரண எண்ணாகக் காணப்பட்டது.

ஏனைய மாவட்டங்களுக்குரிய குறித்த எண்ணிக்கை பூரண எண்ணொன்றையும் பின்னமொன்றையும் கொண்டதாக விளங்கியமையால் அவை கிட்டிய பூரண எண்ணிற்கு "round half up method" மூலம் கணிக்கப்பட்டு உரிய எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்குமான தொகுதிகளின் எண்ணிக்கை அட்டவணை (b) இல் காட்டியவாறு தீர்மானிக்கப்பட்டது.

| அட்டவணை (b) மாகாணசபைத் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| கொழும்பு-20 | கம்பஹா-20 | களுத்துறை-11 | கண்டி-15 |
| மாத்தளை-6 | நுவரெலியா- 8 | காலி- 11 | மாத்தறை- 9 |
| அம்பாந்தோட்டை- 7 | யாழ்ப்பாணம்-8 | கிளிநொச்சி- 2 | மன்னார்- 3 |
| வவுனியா- 3 | முல்லைத்தீவு- 3 | மட்டக்களப்பு- 6 | அம்பாறை- 7 |
| திருகோணமலை- 5 | குருநாகல்- 17 | புத்தளம்- 8 | அநுராதபுரம்- 11 |
| பொலன்னறுவை- 5 | பதுளை-9 | மொனறாகலை- 7 | இரத்தினபுரி-12 |
| கேகாலை- 9 | மொத்தம் 222 | | |

ii தேர்தல் தொகுதியொன்றுக்குரிய பிரதேசத்தை இனங்காண்பதற்கு வரலாற்று ரீதியாக ஏற்ற அங்கீகரிக்கப்பட்ட ஒரு பெயர் காணப்படாவிடத்து, தேர்தல் தொகுதிகளை பெயர் குறித்தல் ஒரே விதத்திலான நடைமுறைக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு ஏற்றுக்கொண்டது. அதற்கமைய தேர்தல் தொகுதியொன்றிற்குரித்தான அதிக கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கையும் சனத்தொகையும் உரித்தான பிரதேச செயலகத்தின் பெயரையே உரிய தேர்தல் தொகுதியின் பெயராகப் பெயரிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

iii. **3அ(4) ஆம் பிரிவு: நிர்வாக மாவட்டங்களைத் தேர்தல் தொகுதிகளாக வேறு பிரித்தல்.**

வதிவாளர்களுக்கு எளிதில் அணுக முடிந்தவாறு பிரதேசத்திற்குள் காணப்படுகின்ற நீரேந்து பிரதேசங்கள் மற்றும் மலைத் தொடர்கள் என்பவற்றின்பால் உரிய கவனம் ஈர்க்கப்பட்டு தேர்தல் தொகுதியொன்று தொடர்ச்சியான ஒரு பிரதேசமாக அமைக்கப்பட வேண்டுமென குழு தீர்மானித்தது.

நடைமுறைச் செயற்பாடுகளுக்காக வேறு தேர்தல் எல்லைகளின் பகிர்ந்தளிப்பை குறைத்துக்கொள்ளும் தேவைப்பாடு இனங்காணப்பட்டதோடு, அனைத்து குடியியல் சார் தகவல்களையும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகப்பிரிவுகள் ஆகிய நிர்வாக அலகுகளுக்கமைய மாத்திரம் பெற்றுக் கொள்ள முடியுமாதலால், அத்தகவல்களை எல்லை நிர்ணயத்தின் போது அடிப்படையாக கொள்வதற்கும் குழு தீர்மானித்தது. சிறிய நிர்வாக அலகான கிராம உத்தியோகத்தர் பிரிவு பிரிபடாமல் இருப்பதிலும் குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது. அவ்வாறே முடிந்தளவு பிரதேச செயலகப்பிரிவுகள் பிரிபடக்கூடாதென்பதையும் குழு கருத்திலெடுத்தது.

எது எவ்வாறாயினும் ஏதேனும் ஒரு விசேட அளவீட்டினைப் பாதுகாக்கும் தேவைப்பாடு ஏற்படுமிடத்து அவற்றை தொடர்ச்சியாக அமையப்பெற்றுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பலவற்றின் கூட்டாகப்பிரித்தொதுக்குவதெனவும் குழு தீர்மானித்தது.

**அனைத்து குடியியல் சார் தகவல்களையும்கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்மற்றும் பிரதேசசெயலகப்பிரிவுகள் ஆகிய நிர்வாக அலகுகளுக்கமைய மாத்திரம் பெற்றுக் கொள்ளமுடியுமாதலால், அத்தகவல்களை எல்லை நிர்ணயத்தின்போது அடிப்படையாக கொள்வதற்கும் குழு தீர்மானித்தது. சிறிய நிர்வாக அலகான கிராம உத்தியோகத்தர் பிரிவு தொகுதிகளுக்குள் பிரிபடாமல் இருப்பதிலும் குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது.**

iv. **3அ(4)ஆ(i) ஆம் பிரிவு: மாவட்டத்திற்குள் தேர்தல் தொகுதிகளிடையே பொது மக்களின் எண்ணிக்கையின் விகித சமமின்மையைக் குறைந்த மட்டத்தில் பேணுதல்.**

மாவட்டத்தின் மொத்த சனத்தொகையை தொகுதி ரீதியாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுப்பதன் ஊடாக ஏதேனும் விகித சமமின்மை உருவாவதைத் தவிர்க்கு முகமாக முதலில் குழு, ஒரு மாவட்டத்திற்குள் தனி உறுப்பினர் தேர்தல் தொகுதி ஒன்றிற்குரிய சனத்தொகையின் சராசரியை கணிப்பிட்டது.

மேலும் தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்கின்றபோது ஏதேனும் இணைப்புடன் கூடிய சமூகங்களின் தேவைப்பாடுகள் மற்றும் புவியியல் அல்லது பௌதிக குணவியல்புகளைக் கருத்திலெடுக்கையில் கணிசமானளவில் விகித சமமின்மை நிலை உருவாகுவதை தவிர்க்க முடியாததாதலால் மாவட்டமொன்றின் தனி உறுப்பினர் தேர்தல் தொகுதிகளிடையே விகிதசமமின்மையின் ஆகக்குறைந்த அல்லது ஆகக் கூடிய அளவை 10 சதவீதத்திற்குள் மட்டுப்படுத்துவற்கும் குழு தீர்மானித்தது.

**மாவட்டத்தின் மொத்த சனத்தொகையை மாவட்டத்திற்குரிய தொகுதிரீதியாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுப்பதன் ஊடாக ஏதேனும் விகிதசமமின்மை உருவாவதைத் தவிர்க்கு முகமாக ஒரு மாவட்டத்திற்குள் தனி உறுப்பினர் தேர்தல் தொகுதி ஒன்றிற்குரிய சனத்தொகையின் சராசரியை கணிப்பிடப்பட்டு அதன் பிரகாரமே தொகுதிகள் உருவாக்கப்பட்டன.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 பேர்...

டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,287ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இன்றும்...

வித்துள்ளது.

அதற்கமைய, இன்று (4) காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் 5 மணிநேரம் மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அவ்வாறே, மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியினுள் இரண்டரை மணிநேரமும் மின் தடை அமுலாகும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (ம)

## உக்ரைன்...

உரையாடியபோது அவர் இதனை தெரிவித்தார்.

இந்த உரையாடல் சுமார் 90 நிமிடங்கள் நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## விமல், உதய...

ட்டு அரசாங்கத்தை விமர்சித்ததன் காரணமாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோர் அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கப்பட்டதாக அமைச்சர்கள் குறிப்பிட்டனர்.

அமைச்சரவை கூட்டுப் பொறுப்பிற்கு முரணாக செயற்படும் அமைச்சர்களுக்கும் அரசாங்கத்தில் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிக்கும் தரப்பினருக்கு எதிராகவும் இனி கடுமையான நடவடிக்கையினை முன்னெடுப்பேன் என அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச வகித்து வந்த கைத்தொழில் அமைச்சர் பதவி, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உதய கம்மன்பில வகித்து வந்த மின்சக்தி அமைச்சர் பதவி, எரிசக்தி அமைச்சராக பதவி வகித்த காமினி லொக்குகேயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு கல்வி அமைச்சர் பதவியும், திலும் அமுனுகமவுக்கு போக்குவரத்து அமைச்சர் பதவியும் பவித்ரா வன்னியாராச்சிக்கு எரிசக்தி அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. (ம)

## ஏற்கக்கூடிய...

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரை நேற்று முன்தினம் சந்தித்தவேளையே அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் இலங்கை எடுத்துள்ள செயற்திட்டங்கள் சிறந்தது எனும் போதிலும் மேலும் பலமாற்றங்கள் அவசியம் என ஆணையாளர் இலங்கை தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

இதன்போது இலங்கை நல்லிணக்க மேம்பாட்டுக்கு எடுத்துள்ள முயற்சிகள் தொடர்பில் இலங்கை தூதுக்குழுவால் ஆணையாளருக்கு எடுத்துரைக்கப்பட்டது. (ம)

## மின்தடைக்கு...

மணி வளைவுப் பகுதியில் ஒன்றுகூடியவர்களால் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தற்பொழுது நாட்டில் பரவலாக பல மணிநேர மின்சாரத்தடை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் மக்களின் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த போராட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சுகிர்தன், சயந்தன் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன், உள்ளூராட்சி சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள்,தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம -104)

## அழகியல்...

தளத்தில் பார்வையிட முடியும்.

அத்துடன், www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## தேசிய...

இரவு 7 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் கனகசபை பாஸ்கரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

கரவெட்டியில் உள்ள வீட்டிலிருந்து இரவு மோட்டார் சைக்கிளில் கல்வியியல் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தபோது வீதியில் வெளிச்சம் இன்றி நிறுத்தப்பட்டிருந்த உழவு இயந்திர பெட்டியுடன் மோதி விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-33)

# ஐ.நாவில் இலங்கை தொடர்பான விவாதம் இன்று

(ஜெனிவா)

ஐ.நாவில் இலங்கை தொடர்பான விவாதம் இன்று நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத்தொடர் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இலங்கை தொடர்பான விவாதம் நேற்று நடைபெற இருந்த நிலையில் ரஷ்யா - உக்ரைன் போர் விவகாரம் காரணமாக குறித்த விவாதம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில்,ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலட் முன் வைத்துள்ள இலங்கை தொடர்பான எழுத்து மூல சமர்ப்பணம் தொடர்பில் இன்றைய அமர்வில் கலந்துரையாடப்படவுள்ளது. (ம)

# ரஷ்யா - உக்ரைன் 2ஆம் கட்ட பேச்சுவார்த்தை முடிவின்றி முடிவு

உக்ரைன் மற்றும் ரஷ்யாவிற்கு இடையில் போர் பதற்றம் நீடித்துள்ள நிலையில், நேற்று இடம்பெற்ற இரண்டாம்கட்ட பேச்சுவார்த்தை முடிவுகள் ஏதும் எடுக்கப்படாமல் நிறைவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், இரு நாடுகளும் மூன்றாம்கட்ட பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் மீது ஏவுகணைகள் மூலம் தாக்குதல் தொடர்கிறது என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ரஷ்யாவால் சாத்தியமான போர்க்குற்றங்கள் பற்றிய விசாரணையை துரிதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

கடந்த மாதம் 24ஆம்திகதிரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்ததில் இருந்து 249 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலகம் நேற்று தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை நேருக்கு நேர் சந்தித்து பேசுவதே சிறந்த வழியென உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய இராணுவம் நேற்றைய தினம் உக்ரேனிய நகரங்கள் மீது அதன் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. பல நகரங்கள் மீது குண்டு வீசி தீவிர தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

மெகா பவர்
திகதி 03/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1043
வெற்றி இலக்கங்கள்: O 02 09 34 41 52

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.03.03
சீட்டிழுப்பு இலக்கம் 036
வெற்றி இலக்கங்கள்: கடகம் 07 31 33 45 கடகம்

மஹஜன சம்பத
திகதி 2022/03/03
சீட்டிழுப்பு இலக்கம் 4695
வெற்றி இலக்கங்கள்: U 5 4 2 3 5 4

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03.03.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2990
வெற்றி இலக்கங்கள்: V 13 30 43 73

தன நிதானய
திகதி - 2022.03.03
சீட்டிழுப்பு இலக்கம் - 725
வெற்றி இலக்கங்கள்: Q 08 36 39 53

அத கோடிபதி - வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1496
சீட்டிழுப்பு திகதி: 2022.03.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,649,800/-
வெற்றி இலக்கங்கள்: 38 42 47 56 I

சனிதா - வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.03
சீட்டிழுப்பு இல: 3833
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,170,520/-
வெற்றி இலக்கங்கள்: 19 23 65 72 D

ராசி
திகதி 03.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3384
வர்ணம் கபில நிறம்
சுப்பர் ஜக்பொட் ரூ.7,737,540/-
வெற்றி இலக்கங்கள்: 03 28 38 46 மிதுனம்
டபிள்: 1025 407
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,877,840/-

லக்கின வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: A 10 40 49 62 67
சீட்டிழுப்பு வாரம் 848
திகதி 2022.03.03 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 218,194,069/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1672
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 03.03.2022
தினம் வியாழன்
வெற்றி இலக்கங்கள்: W 03 20 65 72
அடுத்த சுப்பர் ஜக்பொட்: ரூபா 50,504,139/-

சம்வர்தன வாசனாவ
திகதி: 2022-03-03
வெற்றி வாரம்: 490 | வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.14,028,244/-
வெற்றி இலக்கங்கள்: Y 42 60 41 3
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,860,400/-
ரூ.14,146,436/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 60 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். (10449)

குரு - 077 623 4204, 077 288 0152
076 658 3621, 077 911 6983

## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராசபாதையில் 3 பரப்பு உறுதிக்காணி 12அடிப்பாதையுடன் இராச பாதையையும் பருத்தித்துறை வீதியையும் இணைக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

வீடு கட்ட, தோட்டச் செய்கை என்பவற்றிக்கு உகந்த காணி விலை பேசித் தீர்மானிக்கப்படும். (தயவுசெய்து தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.) ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். காணி பார்ப்பதாயின் தொடர்பிலக்கத்திற்கு தொடர்பு கொண்டு வரவும். (10414)

காணி உரிமையாளர் :
**076 096 0473**

## மணமகன் தேவை

யாழ். இந்து சைவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 இல் பிறந்த மகம் நட்சத்திரம் 8 இல் செவ்வாய் குற்றமுள்ள உயர்கல்வி படித்த கனடா PR உள்ள மணமகளுக்கு தகுந்த வரனை (சைவ போசனம்) எதிர்பார்க்கின்றனர்.

**0097 155 742 0011**
**0097 156 576 3738**
nirna5219@gmail.com (10462)



## வாழ்த்தி மகிழ்கின்றோம்




எமது ஆலய தொண்டர் சபைத் தலைவரான

**திரு. சிவராசா கிரிதரன்**
(காதிய உத்தியோகத்தர்)

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் (03.03.2022) முதுகலைமாணி M.A (சைவசித்தாந்தம்) பட்டம் பெற்றதையிட்டு அவரை மனதார வாழ்த்தி மகிழ்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

கண்ணகி அம்மன் ஆலயம்,
கண்ணகாம்பிகா சமேத
கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்

பரிபாலன சபையும்
தொண்டர் சபையும்
வட்டுக்கோட்டை (10466)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## Job Vacancy
## Agricultural Officer

We are looking for a person with experience in the field of agriculture. The right candidate will have the leadership qualities and aspiration to rise to a more senior role in our company over time.

A formal qualification related to agriculture is desirable.

Thiruvavukarasu Memorial Model Farm is an integrated organic farm situated in a 2.5 acre land at Maviddapuram in the Jaffna district. Activities include crop farming, animal husbandry and manufacture of organic products. The farm is owned by SLS Trust, a not-for-profit company.

Please send your resume to: **slstrust@hotmail.com**

**விவசாய அலுவலர்**
தகைமைகள்: விவசாயத் துறை அனுபவம்,
தலைமைத்துவத் திறன்களும் ஆர்வமும்.
விவசாயத் துறைசார் கல்வித் தகைமை விரும்பப்படும்.
Send resume to: slstrust@hotmail.com (10458)

MAVAI
**Thiruvavukarasu Memorial Model Farm, Maviddapuram**

## மெக்கானிக் தேவை

யாழில் இயங்கும் சர்விஸ் நிலையத்திற்கு மோட்டார் சைக்கிள், ஆட்டோ மெக்கானிக் தேவை. (10468)

**076 557 7199**
**076 678 7288**
**077 759 0427**

## LIVE IN CANADA
## இலவச கருத்தரங்கு

கனடாவில் வேலைவாய்ப்புகள், நிரந்தர வதிவிடம், உயர்கல்வி வழிமுறைகளும் ஆலோசனைகளும்

06-03-2022 ஞாயிறு காலை - 11 மணி

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். (C-3869)

முற்பதிவு அவசியம் 0777-068-777


# மரண அறிவித்தல்



மலர்வு 04 . 04 . 1990

உதிர்வு 26 . 02 . 2022

## யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்

மன்னாரைப் பிறப்பிடமாகவும் ராஜஸ்தான் கருணாநிதி சனசமூக நிலையம் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணியின் பின்கள வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் அவர்கள் கடந்த 26.02.2022 சனிக்கிழமை மாலைதீவில் அகால மரணமானார்.

அன்னார் லக்சனாவின் அன்புக் கணவரும் அஸ்வந்தின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாவும் அன்னாரின் இல்லத்தில் இன்று (04.03.2022) வெள்ளிக்கிழமை நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் அஞ்சலிக்காக மன்னாருக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விளையாட்டுத் துறை நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராஜஸ்தான்,
வல்வெட்டி.

தகவல்: குடும்பத்தினர் (10465)

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையர்க்கரசி சண்முகநாதன்
## (வேவி - மம்மி)



யாழ்.சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி சண்முகநாதன் அவர்கள் 28.02.2022 திங்கட்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - பொன்னாச்சி தம்பதிகளின் கடைசி மகளும் காலஞ்சென்ற இராமலிங்கம் - கமலம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் (திருகோணமலை துறைமுக அதிகார சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, பத்மாவதி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, அப்புத்துரை, லலிதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் குணேஸ்வரி, காலஞ்சென்ற தெய்வநாயகி, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு அண்ணியும் பாவுறாஜ் (பாவு), சித்திரவேல் (சுவிஸ்), ஐஜிகலா (சசி - கனடா), ஹஜினாகலா (சுயி), லிவறாஜ் (கோபு - ராஜ்), காலஞ்சென்ற புவிராஜ், கவிராச் (கவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயலட்சுமி, காலஞ்சென்ற சதாரூபலட்சுமி, சாந்தரூபலட்சுமி ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும் றஜீவன், கேமரூபி (சுவிஸ்), இரமணேஸ்வரன் (கனடா), பரராஜசிங்கம், நிலானி, பாலஜீத்தா, பாலரயன், சிவரயன், சிவகயன் ஆகியோரின் அன்பு மாமியும் சிந்துஜா, லினியா, ஹிசாந்த், ஹயேந்த், ஹரேந்த், விற்றேஷ், சயன், அகழ்யா, லனுஜா, அகத்தியா, விஷ்ருதி, விஷ்ருதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06.03.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் 11.30 மணிவரை பார்வைக்காக RAVIDASS Hall (Shri Guru Ravidass) 28, Carlyle Road, Manor Park, London E12 6BN இல் வைக்கப்பட்டு தகனக் கிரியை அன்றைய தினம் பிற்பகல் 12.00 - 1.00 மணிவரை City of London Cemetery and Crematorium Aldersbrook Road, Mannor Park, London E12 5DQ இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:-

பாவு - மகன்
Home : +41447807193
Mobile: +41 76 584 81 52

இரமணேஸ்வரன்- மருமகன்
Mobile : +15149418807
Home: +514 739 4089

பரராஜசிங்கம் -மருமகன்
Mobile : +447950458884

கோவு (ராஜ்) - மகன்
Mobile : +447956182450

கவி - மகன்
Mobile : +447960412227

(10440)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org